**04.09.2024**

**அசல் வழக்கு எண். 68 /2019**

**வா.சா.1-** திரு.சொரிமுத்து

**சாட்சி முன்னிலையானார். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.**

**2 வது பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை :-**

25.02.2014 ம் தேதியிட்ட பணகுடி சார்பதிவாளர் அலுவலக ஆவண எண்.603/2014 ஆவணத்தை 10.06.2015 ம் தேதி பணகுடி சார்பதிவாளர் ஆவண எண்.1692/2015 ல் ரத்து செய்து விட்டார்கள் என்று சொன்னால் சரிதான். என் தகப்பனார் எனக்கு செட்டில்மெண்ட் ஆவணம் எழுதிக்கொடுப்பதற்கு முன்பு இந்த வழக்கின் 2 வது பிரதிவாதிக்கு 13.02.2014 ம் தேதி ஆவண எண்.459/2014 ல் செட்டில்மெண்ட் ஆவணம் எழுதிக்கொடுத்தார் என்றால் சரிதான். 13.02.2014 ம் தேதி என் தம்பிக்கு எழுதிக்கொடுத்த செட்டில்மெண்ட் ஆவணத்தில் சொத்து தவிர்த்து மீதம் உள்ள சொத்தை என் தகப்பனார் எனக்கு செட்டில்மெண்ட் எழுதிக்கொடுத்தார் என்றால் சரிதான். என் தகப்பனாருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களில் சரிபாதி சொத்தை முன்னதாக என் தம்பிக்கு எழுதிக்கொடுத்து மீத சொத்தை எனக்கு எழுதிக்கொடுத்தார் என்றால் சரிதான். புல எண்430/1பி --ல் என் தகப்பனாருக்கு 3 ஏக்கர் 7-1/2 சென்ட் பாத்தியப்பட்டது என்று சொன்னால் சரிதான். வா.சா.ஆ-2 ல் அந்த சொத்து 3 வது தபசில் சொத்தாக காண்பிக்கப்பட்டது என்றால் சரிதான். என் தகப்பனார் எனது பெயருக்கு எழுதிக்கொடுத்த வா.சா.ஆ-1 செட்டில்மெண்ட் ஆவணத்தில் மேற்படி புல எண்ணில் 2 ஏக்கர் 7-1/2 சென்ட் மட்டும் எனக்கு எழுதிக்கொடுத்தார் என்றால் சரிதான். மீதம் 1 ஏக்கரை தன் கையிருப்பு நிலமாகவும் தெற்கு எல்லையாகவும் வா.சா.ஆ-1 ல் சொல்லியுள்ளார் என்றால் சரிதான். எனக்கு எழுதிக்கொடுத்த செட்டில்மெண்ட் ஆவணத்தை என் தகப்பனார் ரத்து செய்த பின்பும் என் தம்பி பெயருக்கு அந்த சொத்தை கொடுக்கவில்லை என்றால் சரிதான். அந்த சொத்துக்கள் நாளது தேதி வரை என் அப்பா பெயரில் தான் உள்ளது என்றால் என் பெயரில் கூட்டு பட்டா உள்ளது. என் தகப்பனார் எனது பெயருக்கு எழுதிக்கொடுத்த செட்டில்மெண்ட் ஆவணத்தை 25.02.2014 ம் தேதியில் ரத்து செய்ததில் என் தம்பிக்கு எந்த உள்நோக்கமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல அவர் தான் காரணம். **22.12.2014 ம் தேதி ஆவண எண்.3647/2014** என்ற எண்ணில் என் பையன் **லெட்சுமண பெருமாள்**

A BARSAD BEGUM Digitally signed by A BARSAD BEGUM Date: 2024.09.04 17:52:49 +0530

**பெயருக்கு** நான் செட்டில்மெண்ட் எழுதிக்கொடுத்தேன் என்றால் சரிதான் என்னிடம் காண்பிக்கப்படும் செட்டில்மெண்ட் ஆவணம் மேற்படி ஆவணம் என்றால் சரிதான் அது **பி.வா.சா.ஆ.1**. பி.வா.சாஆ.1 படி என் பையன் பெயருக்கு 3 ஏக்கர் 7-1/2 சென்ட் பாத்தியப்படுத்திக்கொடுத்தேன் என்றால் சரிதான். என் தகப்பனார் வா.சா.ஆ-2 ல் என் பெயருக்கு எழுதிக்கொடுத்த செட்டில்மெண்ட் ஆவணதகின் அடிப்படையில் எனக்கு கிடைத்த 2 ஏக்கர் 7-1/2 சென்ட் சேர்த்து மொத்த விஸ்தீர்ணமான 3 ஏக்கர் 7-1/2 சென்ட் பொறுத்து என் மகன் பெயருக்கு செட்டில்மெண்ட் எழுதிக்கொடுத்தேன் என்றால் சரிதான். 14.10.2014 ம் தேதியில் ஆவண எண.2949/2014 ல் புல எண்.467/41-ல் என் மகன் பெயருக்கு 12.5 சென்ட் செட்டில்மெண்ட் எழுதிக்கொடுத்தேன் என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படும் செட்டில்மெண்ட் ஆவணம் மேற்படி ஆவணம் என்றால் சரிதான் அது **பி.வா.சா.ஆ.2**. மேற்படி பி.வா.சா.ஆ.2 ஆவணத்தில் என் மகனுக்கு எழுதிக்கொடுத்த சொத்து என் தகப்பனார் எனக்கு வாய்மொழியாக கொடுத்தது என குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.2 ல் சொல்லியுள்ளவாறு என் தகப்பனார் என் பெயருக்கு வாய்மொழியாக எந்த காலத்திலும் சொத்துகொடுத்தது இல்லை என்று சொன்னால் அது தவறு. என் தகப்பனார் என் பெயருக்கு வாய்மீொழயாக எந்த சொத்தையும் கொடுக்கவில்லை என்பதால்தான் அவர் எனக்கு எழுதிக்கொடுத்த ஆவணத்தில் கையிருப்பாக வைத்திருந்த 1 ஏக்கரை சட்ட விரோதமாக என் மகன் பெயருக்கு செட்டில்மெண்ட் எழுதிக்கொடுத்தேன் என்றால் சரியல்ல. நீதிமன்றத்தை ஏமாற்ற வேண்டும் என்ற நோக்கத்தில் தான் பி.வா.சா.ஆ.1, 2 ஐ மறைத்து இந்த வழக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல. என் தகப்பனார் எனக்கு எழுதிக்கொடுத்த செட்டில்மெண்ட் ஆவணத்தின் அடிப்படையில் என் மகனுக்கு 10 மாத கால இடைவெளியில் பி.வா.சா.ஆ.1 ஆவணத்தை மோசடியாக ஏற்படுத்திக்கொடுத்தேன் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ-1, 2 ஆவணங்கள் ஏற்பட்ட போது தாவா சொத்து புல எண்.467/1 டி- என்பது தவறு என்ற விபரம் எனக்கு தெரியும் என்று சொன்னால் சரியல்ல எனக்கு தெரியாது தெரிந்திருந்தால்அப்போது சரிசெய்திருப்பேன். தாவா புல எண்.467/1 டி - என் அப்பாவுடைய சொத்து அல்ல என்ற விபரம் வில்லங்க சான்று எடுத்து பார்த்திருந்தால் தெரிந்திருக்கும் என்றால் சரியல்ல எனக்கு படிப்பறிவு இல்லை. வா.சா.ஆ-2 செடடில்மெண்ட் ஆவணத்தில் சொல்லப்பட்ட புல எண் தவறாக உள்ளது எனறும் அதை திருத்தி தரும் படி என்

Digitally signed by A BARSAD BEGUM
Date: 2024.09.04 17:52:57 +0530
A BARSAD BEGUM

அப்பாவிடம் நான் கேட்கவில்லை என்றால் சரியல்ல கேட்டேன் அப்போது நான் பெங்களூரில் இருந்தேன் அடுத்த முறை நீ வரும் போது மாற்றி தருவதாக என்னிடம் சொன்னார் ஆனால் மாற்றி தரவில்லை. அந்த சமயத்தில் என் அப்பா என் தம்பியுடன் தம்பி வீட்டில் இருந்தார். என் தம்பி என்ன படித்துள்ளார் என்று கேட்டால் எனக்கு தெரியாது. அவர் பொறியியல் படிப்பு படித்துளளார் என்று சொன்னால் எனக்கு தெரியாது. என் தம்பி வில்லங்க சான்று எடுத்து பார்த்த போது தான் நான் என் மகனுக்கு எழுதிக்கொடுத்த செட்டில்மெண்ட் ஆவணம் குறித்து என் அப்பாவுக்கும் என் தம்பிக்கும் தெரிய வந்தது என்று சொன்னால் அது தவறு. என் அப்பாவிடம் வலுக்கட்டாயமாக செட்டில்மெண்ட் ஆவணத்தை எழுதி வாங்கியும் அவர் மருத்துவ செலவுக்காக வைத்திருந்த 1 ஏக்கர் நிலத்தை அவருக்கு தெரியாமல் என் மகன் பெயருக்கு செட்டில்மெண்ட் மூலம் பாத்தியப்படுத்திக்கொடுத்தேன் என்றால் சரியல்ல. 22.12.2014 ம் தேதியில் என் மகனுக்கு நான் செட்டில்மெண்ட் எழுதி வைத்த போது புல எண் மாறிய விபரம் எனக்கு தெரியும் என்றால் சரியல்ல. நான் என் மகனுக்கு 1 ஏக்கர் அதிகமாக சேர்த்து மோசடியாக செட்டில்மெண்ட் எழுதிய காரணத்தினால் தான் அதை தெரிந்து கொண்ட என் அப்பா என் பெயரில் எழுதிவைத்த செடடில்மெண்டை ரத்து செய்து விட்டார் என்றால் சரியல்ல. என் மகன் பெயருக்கு மோசடியாக செடடில்மெண்ட் எழுதி வைத்தது சம்பந்தமக என் அப்பா மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலும் வருவாய் அலுவலகத்திலும் என் மீது கொடுத்த மனுவின் பேரில் நடந்த விசாரணையில் ஆஜரான நான் என்ன விபரம் சொன்னேன் என்றால் அவ்வாறு என் அப்பா மனு கொடுக்கவில்லை நான் ஆஜராகவில்லை. சர்வே எண் மாறுபட்டுள்ள விபரம் 2014 ம் வருடத்திலேயே தெரியும் என்றும் வழக்கிற்காக 2018 ம் வருடம் தான் தெரியும் என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலும் வருவாய் அலுவலகத்திலும் என் மீது கொடுத்த மனுவின் பேரில் நடந்த விசாரணையில் ஆஜராகி நான் அவ்வாறு மோசடியாக ஆவணம் பதிவு செய்யவில்லை என்று சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல வழக்கிற்காக அவ்வாறு எந்த மனுவும் என் தகப்பனார் கொடுக்கவில்லை நான் ஆஜராகவில்லை என பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. என் தகப்பனார் எனக்கு 25.02.2014 ல் எழுதி வைத்த செட்டில்மெண்ட் ஆவணத்தை 10.06.2015 ம் தேதி தான் சுமார் 1-1/2 வருடங்கள் கழித்து ரத்து செய்தார் என்றால் சரிதான். என்அப்பா செட்டில்மெண்ட் எழுதிக்கொடுத்த பின்னர்

A BARSAD BEGUM
Digitally signed by A BARSAD BEGUM
Date: 2024.09.04 17:53:03 +0530

சொத்தின் அனுபவம் என் வசம் கொடுக்கப்பட்டிருந்தால் என் பெயரில் தனிப்பட்டா ஏற்பட்டு என் அனுபவத்தை காட்டும் ஆவணம் தாக்கல் செய்திருப்பேன் என்றால் சரியல்ல. செட்டிலமெண்ட் ஆவணத்தை ஏற்றுக்கொண்டு சொத்தின் அனுபவம் என் பெயருக்கு வழங்கப்படவிலலை என்பதால் என் பெரில ்தனிப்பட்டா பெறவில்லை என்றால் சரியல்ல. உண்மைக்கு புறம்பாக உண்மையை மறைத்து இந்த வழக்கை தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல. என் தகப்பனார் எழுதி வைத்த செட்டில்மெண்ட் ரத்து ஆவணம் செல்லக்கூடியதல்ல என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

<u>**மறுவிசாரணை - இல்லை**</u>

A BARSAD BEGUM

Digitally signed by A BARSAD BEGUM
Date: 2024.09.04 17:53:08 +0530